

நேற்று (18.2.2026) தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 167வது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (நினைவகங்கள்) தமிழ்செல்வராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எ. நாகராசன் எம்.சி, தலைமை!

# கொளத்தூர் மேற்குப் பகுதியில் “தமிழ்நாடு தலை குனியாது” கூட்டம்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி சிறப்புரை!

சென்னை, பிப்.19-

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதியில் “தமிழ்நாடு தலை குனியாது” மாபெரும் பொதுக்கூட்டம் 20.02.2026, வெள்ளிக்கிழமை, மாலை 6.00 மணியளவில், சென்னை, அகரம், பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெறுகிறது.

இப்பொதுகூட்டத்தில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், சி. மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார் எம்.சி, வானவில்விஜய், தேவ ஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ். சித்திக், ம.அசோக்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.தயாளன், எம். சாக்ரடீஸ், வி. வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி. சூரி, எஸ்.முருகன், என். சௌந்தர், என்.புவுல்ராஜ், என்.ராமச்சந்திரன், M.D.தமிழ்செல்வன், எம். தாவுத்பீ எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி, டி.யோகபிரியா எம்.சி, பி.அமுதா ஆகியோர் வரவேற்கின்றனர்

இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக கல்வியாளர் அணிச்செயலாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயல் பிரியாராஜன், அ. வெற்றிஅழகன் எம்.எல்ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்ஏ, ப.ரங்கநாதன் எம்.எல்.ஏ, இரா.விடுதலை. மாநில நிர்வாகிகள்: கே. எஸ்.ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், கவிஞர் நன்மாறன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, எஸ்.மணிமுடி, ஆர்.வரதன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதிஇளம்சுருதி, என்.பி.எம். ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், இந்திஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத். பகுதிகழக செயலாளர்கள்: கூ.பீ.ஜெயின், வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், டி.எஸ்.பி. இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜன், எஸ். முரளி, சொ.வேலு, எஸ். ராஜசேகர், வி.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள், கழகமூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் ப.அதிபதி, MJC பாபு நன்றி கூறுகிறார்கள்.

## தென்காசி தெற்கு மாவட்டம்

# ஆலங்குளம் வடக்கு, ஆலங்குளம் மத்திய, கடையநல்லூர் மேற்கு, கடையநல்லூர் தெற்கு, கீழப்பாவூர் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் 16.12.2025 அன்று தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் வடக்கு, ஆலங்குளம் மத்திய, கடையநல்லூர் மேற்கு, கடையநல்லூர் தெற்கு, கீழப்பாவூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அந்தந்த ஒன்றியங்களுக்கான பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆலங்குளம் வடக்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1.எஸ்.அம்பி, நடுத் தெரு, நவநீதகிருஷ்ணாபுரம், 2. எம். பரமசிவன், வடக்குத் தெரு, கல்லத்திகுளம். 3. எம்.ரமேஷ், தெற்குமேடு, தட்டப்பாறை, 4. திருமதி எஸ்.ஸ்ரீதேவி, சர்ச் தெரு, ஊத்துமலை, 5.எஸ்.கோட்டைச்சாமி, மேலத்தெரு, அண்ணாமலைப்புதூர். 6. ஜி. சுப்பிரமணியன், வடக்குத் தெரு, தட்டப்பாறை. 7.எம்.ஜி. ராமச்சந்திரன், கனாக்கடை தெரு, ஊத்துமலை. 8. ஏ.முருகேசன், அம்மன்கோவில் தெரு, பலபத்திர ராமபுரம். 9. ஆர். ராஜாமணி, வடக்குத் தெரு, கீழக்கலங்கல். 10. எஸ். விண்ணரசு, வடக்குத் தெரு, மேலக்கலங்கல்.

**ஆலங்குளம் மத்திய ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. பாலசுப்பிரமணியன், அம்பிகை நகர், வீராணம்–, 627 861. 2. பால்துரை, கிழக்கு தெரு, கருவந்தா, வீரகேரளம்புதூர். 3. எம்.எஸ்.சந்திரன், மொட்டையன்கோவில் தெரு, சோலைசேரி. 4. கலைச்செல்வி, வடக்குத்தியம்மாள் கோவில் தெரு, அச்சங்குட்டம். 5. ஆ. கணபதி, லட்சுமிபுரம், அச்சங்குட்டம், வீரகேரளம்புதூர். 6. எஸ்.ராமச்சந்திரன், தெற்கு தெரு, வீரகேரளம்புதூர். 7. பி. மாரியப்பன், தெற்கு தெரு, வாடியூர், வீரகேரளம்புதூர். 8. பி. பரமசிவன், மெயின் ரோடு, பரங்குன்றாபுரம், வீரகேரளம்புதூர். 9. எம்.ஜோசப்பூமாலைராஜா, மெயின் ரோடு, மரியதாய்புரம். 10. அன்சர் அலி, முஸ்லீம் மேலத் தெரு, வீராணம், வீரகேரளம்புதூர்.

**கடையநல்லூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. சு.வேல்ச்சாமி, கர்ணம் தெரு, சொக்கம்பட்டி. 2.கே. சங்கரபாண்டியன், பள்ளிக்கூடத் தெரு, திரிகூடபுரம். 3. சு.முருகேசன், பிள்ளையார் கோவில் தெரு, சொக்கம்பட்டி. 4. பெ. பண்டாரச்சாமி, மெயின் ரோடு, சிவராமப்பேட்டை, கொடிக்குறிச்சி, 5. தி. மாரியப்பன், சிவகாமியாபுரம், நெடுவயல். 6.ஆ. லெட்சுமணன், அம்மன் கோவில் தெரு, காசிதர்மம். 7. க.முருகன், அரண்மனைத் தெரு, சொக்கம்பட்டி. 8.என்.ராமசாமி, பிள்ளையார்கோவில் தெரு, சொக்கம்பட்டி. 9. கேஆர்கே.முருகேசன், மெயின் ரோடு, சொக்கம்பட்டி., 10. எஸ்.கதிரேசன், திருவள்ளுவர் தெரு, சொக்கம்பட்டி.

**கடையநல்லூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. க.கைலாசம், ஆசாரிபிள்ளையார்கோவில் தெரு, குலையநேரி. 2. ஏ.பீர் முகம்மது, போஸ்ட் ஆபீஸ் தெரு, ஆனைகுளம். 3.வி. குமார், கீழத் தெரு, ஆனைகுளம். 4. எஸ். கணேசன், வடக்குத் தெரு, அம்மையாபுரம். 5. ஆர்.திருமலைக்குமார், காமராசர் தெரு, பூப்பாண்டியாபுரம். 6. சுப்பையா (ஏ) செல்வர், மெயின் ரோடு, அருணாச்சலபுரம். 7. எஸ்.காந்தி, வடக்குத் தெரு, குலையநேரி. 8. எம். வெயில்முத்து, ஊர் கிணறு தெரு, இரட்டைகுளம். 9. கே. தர்மராஜ், காளியம்மாள் கோவில் தெரு, துரைச்சாமிபுரம். 10. பி. மாணிக்கம், அம்மன் கோவில் தெரு, இரட்டைகுளம்.

**கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. சு. வினைதீர்த்தான், மெயின் ரோடு, திப்பணம்பட்டி–627 808. 2. இரா. சமுத்திரப்பாண்டியன், தெற்கு தெரு, இராமச்சந்திரபட்டணம். 3. வளர்மதி ஆர்.ராஜன், காக்கும் பெருமாள்பட்டி தெரு, ஆவுடையானூர். 4. சு.ரவிக்குமார், தீர்த்தாரப்பபுரம், ஆவுடையானூர்–627808. 5. ரா.செந்தூர்முருகன், வெள்ளைப்பனயேறிப்பட்டி, அரியப்புரம். 6.செ.ஜான்நியூட்டன், மாடியனூர், ஆவுடையானூர். 7. எஸ்.செய்யதுஅலி, பள்ளிவாசல், வடக்குத் தெரு, ரகுமானியப்புரம். 8. மு.சரவணகுமார், காமராஜர் தெரு, அரியப்பபுரம். 9. ரா. ராஜன், தெற்கு தெரு, சிவநாடானூர்–627808. 10.க.மல்லிகா, வன்னியசுந்தரபுரம், திப்பணம்பட்டி.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## அமைச்சர்கள் கலந்து கொண்டனர்!

சென்னை, பிப். 19-

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் (19.02.1855 - 28.04.1942) அவர்களின் தமிழ்த்தொண்டினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் பிப்பிரவரித் திங்கள் 19ஆம் நாளன்று தமிழ்த் தாத்தாவின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.

வான்புகழ் தமிழையும் வங்கக் கடற்காற்றையும் தமிழ் மூச்சுடன் உலகுக்கு உவந்தளித்த மகாமகோபாத்தியாய, மகாவித்துவான் உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் - டி. லிட் அவர்களின் 172ஆம் பிறந்தநாளான 2026 பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளன்று (வியாழக்கிழமை) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் எழுபத்து எட்டு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்கு காலை 9.15 மணிக்கு மலர் வணக்க நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

திராவிட வித்யா பூஷணம் உ.வே. சாமிநாதையர் 17 ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஐந்தாண்டுக் காலம் பயின்று தமிழறிஞராக மிளிர்ந்தார். தொடக்கத்தில் கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியில் இருந்த உ.வே.சா. அவர்கள், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் (1903 - 1919) பேராசிரியராகப் பணிபுரிந்தார். அழிந்து போகும் நிலையில் ஓலைச் சுவடிகளிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் தேடித் தேடி, அச்சிட்டுப் பதிப்பித்தார். அச்சுப்பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தார். 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் சேகரித்திருந்தார்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள், சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களையும் பல்வகை சிற்றிலக்கியங்களையும் பதிப்பித்தார். தாம் பதிப்பித்த ஒவ்வொரு நூலிலும் தம் புலமை மாட்சியை முன்னுரையில் தெளிவாகப் புலப்படுத்தினார். குறுந்தொகைக்கு உ.வே.சா. உரையெழுதிய பொழுது அவருக்கு வயது எண்பத்திரண்டு. நூறுப் பக்கத்தில் ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருப்பது பதிப்பிற்கு அணிகலனாகத் திகழ்கிறது. உ.வே.சா. ஒரு பல்துறைக் களஞ்சியம், உரையாசிரியர், உரைநடை ஆசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், பேராசிரியர், பாடலாசிரியர், இசைக்கலைஞர் எனப்பல பாங்குகளில் தம் தலைமை மாட்சியை நிறுவியவர்.

செந்தமிழ்த் திலகமாய்த் திகழ்ந்த அவரின் நினைவு நீங்காது நிற்க அவர் மறைந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவர் பணியாற்றி ஓய்வு பெற்ற சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தின் வாயிலில் அவரது தமிழ்ப்பணியைப் போற்றும் விதமாக 1948, மார்ச் 7 ஆம் நாளன்று உ.வே.சா. வின் உருவச்சிலை நிறுவப்பட்டது. அதில் அவர் வாழ்நாளில் பெற்ற பாராட்டுகள் யாவும் குறிக்கப்பட்டதுடன் மகாகவி பாரதியாரின் வாழ்த்துப் பாடலின் இறுதி இரு வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளது.

உ.வே.சாமிநாதையரின் நினைவினைப் போற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும், தமிழறிஞர்களும், பொதுமக்களும் மலர் வணக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கான முன்னெடுப்புகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

## திருப்பூர் தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.ஆர்.பாபு அவர்கள் உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் தான் வகித்துவந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால்,

திருப்பூர் தெற்கு மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 20 (வெள்ளிக் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை – 18
நாள்: 17.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தென்காசி வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டத்தில், ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 ( வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 18.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல்!

# மகாராஷ்டிரா துணை முதலமைச்சர் அஜித்பவார்-முனைவர் ச.சீ.இராசகோபாலன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்!

## சட்டப் பேரவையில் நிறைவேற்றம்!

சென்னை,பிப்.19,

சட்டப் பேரவை நேற்று கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் காரைக்குடி ந.சுந்தரம், குடியாத்தம் கு.லிங்கமுத்து ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அதே போன்று மகாராஷ்டிரா மாநில துணை முதலமைச்சர் அஜித்பவார், மூத்த கல்வியாளர் முனைவர் ச.சீ. இராசகோபாலன் ஆகியோர் மறைவுக்கு பேரவையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பேரவையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காத்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியம் நெமிலி கிராமத்தில் வசிக்கும் நாம் தமிழர் கட்சியின் மாநில மாணவரணி இணைச் செயலாளர் வைரமணி மற்றும் நாம் தமிழர் கட்சியினர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி.எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் மண்டலப்பொறுப்பாளர் ஆ.இராசா.எம்.பி. ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.உடன் திருத்தணி வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.எல்.விஜயகுமார், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.என்.எம்.உபயதுல்லா

### பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வருந்தவர்.

2020–ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**